முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
L.A.O.P. No. 46/2022

<u>கோரிக்கையாளர் தரப்பு சாட்சி .1/ திரு. பாலாஜி / 02.09.2024</u>

<u>எதிர்கோரிக்கையாளர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் லோட்டஸ் கண் மருத்துவமனையில் Associate Vice President ஆக இருந்து வருகிறேன். சங்கீதா சுந்தரமூர்த்தி மேனேஜிங் டிரைக்டர் எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கியுள்ளார். வழக்கு விவரம் எனக்கு தெரியும். அரசாங்க வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் ஆர்ஜிதம் செய்யப்படும் நிலத்திற்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் விவரம் தெரியுமா என்று கேட்டால் சந்தை மதிப்பின் அடிப்படையில் கொடுப்பதாக கேள்விப்பட்டேன். இந்த மனுவில் சம்மந்தப்பட்ட T.S.No. J/28/126 ல் 60 சதுர மீட்டர் அளவுள்ள காலி இடத்திற்கு நஷ்ட ஈடாக 8,97,900/– ரூபாய் என்று அரசாங்க வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும், கூடுதல் ஆறுதல் இழப்பீட்டு தொகை (Solatium) ஆக மேற்கண்ட தொகையான ரூ.8,97,900/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும், கூடுதல் இட மதிப்பீட்டு தொகையாக 22.09.2011 முதல் 14.08.2020 வரை 12 சதவீதம் கணக்கிட்டு ரூ.9,58,626/– வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆக மொத்தம் நஷ்ட ஈடாக ரூ.27,54,426/– வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் பின்னிட்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது கூடுதல் இழப்பீடு கேட்டு மனுதாக்கல் செய்துள்ளதற்கு ஆதரவாக வேறு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. உரிய சட்ட வழிமுறைகளைப் பின்பற்றி நியாயமான நஷ்டஈடு மனுச்சொத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக நஷ்ட ஈடு வழங்க வழிமுறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, நாங்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுச்சொத்துக்கள் நொய்யல் ஆற்றுக்கரையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மனுச்சொத்தின் ஒரு பகுதியான திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிப்பாளையம் கிராமம் T.S.No.J/28/127 ல் உள்ள மொத்த பரப்பு 50 சதுரமீட்டர் விஸ்தீரணமானது அரசு புறம்போக்கு நிலம் நொய்யல் ஆறு என்று அரசு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ளது என்றால் நாங்கள் 18.04.2018 ஆம் தேதி கிரையம் வாங்கும் போது அவ்வாறு இல்லை. வில்லங்க சான்று எடுத்து பார்த்து அவ்வாறு எவ்வித வில்லங்கம் எதுவும் இல்லை என்று தெரிந்து தான்

கிரையம் வாங்கினோம். அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி 50 சதுரமீட்டருக்கான மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆகவே, மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் பெயரில் மேற்படி 50 சதுர மீட்டர் நிலத்தில் உரிமை இருந்திருந்தால் அதை நிலைநாட்டும் வகையில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உரிய பரிகாரம் கோரப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு இல்லை என்பதால் மேற்கொண்டு நஷ்ட ஈடே வழங்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2024.09.02 00:49:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.